# 13. சமுதாய சீர்திருத்த இயக்கங்கள்

*நாடார்கள் அடக்கி, ஒடுக்கி, ஒதுக்கி வைக்கப்பட்டாலும் அவர்கள் பெருமைக்குரிய உயர்குடி மக்கள் என்பதற்கான குறிப்புகள் உள்ளன.*

*– ஜான் அப்பா*

## 13.1 சவாலும் சமாளிப்பும்

உலக சமுதாயங்களின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி பற்றி ஆழ்ந்து ஆராய்ச்சி செய்தவர் **அர்னால்டு ஜோசப் டாயின்பி** (Arnold Joseph Toynbee, 1889-1975). இவர் **சாதனை சமுதாயங்களின்** (Achieving Societies) எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் **சவாலும்** (Challenge) **சமாளிப்பும்** (Response) காரணங்கள் என்று கூறுகின்றார். அதாவது, அக புற சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு சமாளிக்கும் சமுதாயங்கள் வாழும், வளரும்; மாறாக, சவால்களை சமாளிக்க முடியாத சமுதாயங்கள் சரியும், சாகும். ஒரு சமுதாயம் வாழ்வதற்கும் வீழ்வதற்கும் அதன் **ஆக்கத் தலைவர்கள்** (Creative Individuals) அல்லது **ஆக்கச் சிறுபான்மையினர்** (Creative Minority) கருவிகளாகப் பயன்படுவர் என்று பல எடுத்துக்காட்டுகளுடன் நியாயப்படுத்துகிறார் டாயின்பி. இவரது அளவுகோலைக் கொண்டு பார்க்கும் போது **கிறித்துவ சமயப் பரப்பாளர்களின் மதமாற்ற சவாலுக்கு எதிரான சமாளிப்பு இயக்கமே சமுதாய–சமய சீர்திருத்த இயக்கங்களாகும்.**

## 13.2 சர்ச்சை

1805 ஆம் ஆண்டு கல்கத்தாவில் வாழ்ந்த **கிளாடிய புக்கானின்** (Glaudius buchanan) என்ற பாதிரியார் வெளியிட்ட ஒரு **துண்டு வெளியீடு** (Pamphlet) கிறித்துவ சமயப் பரப்பாளர்களுக்கிடையே பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த சர்ச்சை எட்டு ஆண்டுகள் நீடித்தது! இச்சொற் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் சமயப் பரப்புதலுக்கும், மதமாற்றத்துக்கும் ஆதரவாகவும், எதிராகவும் வாதிட்டனர். ஒருசாரார் மதமாற்றம் மாபெரும் மனிதாபிமான முயற்சி என்று கூறினர். மறுசாரார் பிரிட்டிஷ் அரசாங்கம் அதன் ஆதிபத்திய வளர்ச்சிக்குப் பயன்படுத்திய உத்தியே மதமாற்றம் என்று எதிர்வாதம் செய்தனர். மரம் கனிகளால் அறியப்படும்; மனிதன் நடவடிக்கைகளால் அடையாளம் காணப்படுவான். கிறித்துவ குருமார்களின் மனிதாபிமான முயற்சிகளை விட மதமாற்ற நடவடிக்கைகளே மிகைப்படுத்தப்பட்டன.

## 13.3 மேலாடைப் போராட்டம், 1822–1858

### 13.3.1 வியத்தகு வளர்ச்சி

தற்காலத் தமிழ் நாட்டு வரலாற்றில் **நாடார்களின் எழுச்சியும், வளர்ச்சியும் வியத்தகு நிகழ்ச்சியாகும்.** நாடார்கள் பாரம்பரியப் பெருமைக்குரிய

மண்ணின் மைந்தர்கள். இவர்கள் மதுரைப் பாண்டிய மன்னர்களுடன் தொடர்புபடுத்திக் கொண்டனர். நாடார்கள் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் காலங்களில் நிர்வாகிகளாகவும், கணக்கர்களாகவும் இருந்ததாக **கள்ளடக்குறிச்சி கல்வெட்டுகள்** (Kalladaikuruchi Inscription) கூறுகின்றன. 19 ஆம் நூற்றாண்டு வரை **'சாணார்கள்'** என்று அழைக்கப்பட்ட இவர்கள் 1921 மக்கள் தொகை கணக்கெடுப்பில் **நாடார்கள்** என்று பதிவு செய்யப்பட்டனர்.

## தன்மானமிக்கவர்கள்

'கள்' இறக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தமையால் சாணார்கள் தாழ்ந்த சாதியினராகக் கருதப்பட்டனர்! இவர்களது ஒற்றுமையின்மையைப் பயன்படுத்திக் கொண்ட நாயக்கர்களும், அவர்களுக்குத் துணைபோன பிராமணர்களும் சாணார்களைத் தீண்டத்தகாதவர்களாகக் கருதி சாதி வரம்பின் விளிம்புக்கே தள்ளிவிட்டனர்! இவர்களது வறுமையை வாய்ப்பாகக் கொண்டு மதமாற்றிகள் சாணார்களின் ஒரு பகுதியினரை கிறித்துவ மதத்திற்கு மாற்றினர்! எனினும் தன்மானமிக்க இவர்கள் தங்களது சமுதாய, பொருளாதார, அரசியல் உயர்வுக்காக உயர் சாதியினரை எதிர்த்துப் போராடத் துணிந்தனர்.

## 13.3.2 புலம் பெயர்ந்தோர்

நாயக்கர்களின் ஆட்சிக்காலத்தில் நாடார்கள் மதுரையை விட்டு வெளியேறி விருதுநகர், சிவகாசி, திருநெல்வேலி போன்ற நகர்களுக்குக் குடிபெயர்ந்து சென்றனர். ஆங்கிலேயரின் வருகைக்குப் பிறகு தெற்கு மாவட்டங்களில் பாதைப் போக்குவரத்து சீர் செய்யப்பட்டு, பாதுகாப்பும் வர்த்தக வாய்ப்புகளும் அதிகரித்தன. இவற்றை நன்கு பயன்படுத்திக் கொண்ட நாடார்கள் தங்களது கைவினைப் பொருட்களை விற்பதற்கும், பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்வதற்காகவும், பல இடங்களில், குறிப்பாக சிவகாசி, விருதுநகர், சாத்தான்குடி, திருமங்கலம், பாளையம்பட்டி, அருப்புக்கோட்டை ஆகிய ஊர்களில் தங்களது நன்கு பாதுகாக்கப்பட்ட பேட்டைகளை அமைத்துக் கொண்டனர். அதுமட்டுமல்ல. இவர்கள் சத்திரியர்களின் பழக்கவழக்கங்களைப் பின் பற்றியதால் இவர்களது சமூக நிலை மேலும் உயர்ந்தது. நாடார்கள் செல்வமும், செல்வாக்குமிக்க சமுதாயமாக உயர்ந்தனர். இவர்களது வியத்தகு உயர்வு உயர் வகுப்பாரின் விரோதத்தையும் வெறுப்பையும் வளர்த்து 19 ஆம் நூற்றாண்டின் கடைப் பகுதியில் சாதி மோதல்களில் முடிந்தது!

## 13.3.3 குடியேறிகள்

17 ஆம் நூற்றாண்டு இறுதியில் சில நாடார் குடும்பத்தினர் குடிபெயர்ந்து சென்று திருவனந்தபுரத்தில் குடியேறினர். அதற்குக் காரணம் தமிழ் நாட்டுக்கும் திருவிதாங்கூருக்கும் இடையே இருந்த வரலாற்றுத் தொடர்பாகும். **வேநாடு** என்ற ஊர் தான் திருவிதாங்கூர் என்று விரிவடைந்தது. சேர நாட்டின் பகுதியாக இருந்த திருவிதாங்கூரைத் தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்தனர். பின்னர் திருவிதாங்கூர் மலையாள மன்னர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. எனினும் திருவிதாங்கூரைத் தமிழ்

நாட்டின் பகுதியாகக் கருதிய நாடார்கள் உயர் சாதியினரின் கொடுமைக்கு அஞ்சி அங்கு சென்று குடியேறினர். விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டு, கடுமையாக உழைத்து, வாழ்க்கையில் உயர்ந்தனர்.

### 13.3.4 சாதிக் கொடுமை

திருவிதாங்கூர் வந்து குடியேறி, உழைப்பால் உயர்ந்த நாடார்களை உயர்சாதி நம்பூத்திரிகள் விரும்பவில்லை; வெறுத்தனர். மலையாள மன்னர்கள் நாயர்களை ஊக்குவித்து திருவிதாங்கூரில் பெரிய அளவில் குடியமர்த்தினர். அவ்வாறு குடியமர்ந்த உயர்சாதி நாயர்கள், நாடார்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். நாயர்களும், பிராமணர்களும் சேர்ந்து கொண்டு நாடார்கள் வசமிருந்த விளைநிலங்களை அபகரித்துக் கொண்டனர். இந்த அநீதி நில ஆக்கிரமிப்புக்கு ஆட்சியாளர்களும் ஆதரவு அளித்தனர். அதுமட்டுமல்ல. நிலமின்றி, வேலையின்றி, நிராதரவாக விடப்பட்ட நாடார்களை விவசாயக் கூலிகளாக்கி, நீர்ப்பாசன விரிவாக்கத்துக்கும், பாதைகள் போடுவதற்கும், பொதுக் கட்டடங்களைப் பராமரிப்பதற்கும், கோயில் நிலங்களை உழுவதற்கும், கோயில் யானைகளைப் பார்த்துக் கொள்வதற்கும், பிராமணர்களுக்கு எடுபிடி வேலை செய்வதற்கும் கட்டாயப்படுத்தப்பட்டனர். நாடார்கள் பொதுப் பாதைகள், கிணறுகள், ஆலயங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதைத் தடை செய்தனர். ஆண்கள் இடுப்புக்கு மேல் ஆடை அணியக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டனர்; மீறியோர் தண்டிக்கப்பட்டனர். அதேபோன்று நாடார் பெண்கள் மார்பகத்தைக்கூட மறைக்கக் கூடாது என்று கட்டாயப்படுத்தப்பட்டனர். நாயர் பெண்களைப் போன்று இடுப்பில் குடம் சுமந்து செல்லக்கூடாது என்றும் தடை செய்யப்பட்டனர். நாடார் ஆண்களும் பெண்களும் உயர் சாதியினருக்கு முன் குறிப்பிட்ட தொலைவில் கைகட்டி, குனிந்து நின்று, காலில் விழுந்து, அவர்கள் அனுமதித்தபின் வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற பழக்கத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தனர். குனியக் குனியக் குட்டப்பட்ட நாடார்கள் விடிவு காலத்துக்காகக் காத்திருந்தனர். அந்த காலகட்டத்தில் தான் **கிறித்துவ குருமார்கள், வைகுந்தசாமி, நாராயணகுரு, இளையான்காளை, புலிப்பனம், இசக்கிமதன்** போன்றோர் நாடார்களின் சமுதாய விடுதலைக்காகக் கைகொடுத்தனர்; போராட முன் வந்தனர்; குரலற்றோருக்குக் குரலாக ஒலித்தனர்.

### 13.3.5 சமுதாய இயக்கம்

#### இயக்கங்கள் பலவகை

சமுதாய சீர்திருத்த இயக்கங்கள் சமுதாயத்தின் சில சீர்கேடுகளை நீக்குவதற்காக மேற்கொள்ளப்படுகின்றன. இந்த இயக்கங்கள் **1) புரட்சிகர இயக்கம்** (Revolutionary). இவ்வியக்கத்தின் நோக்கம் ஒரு குறிக்கோளின் அடிப்படையில் சமுதாயத்தை மாற்றி அமைப்பது; **2) மீட்பு இயக்கம்** (Revivalist Movement). இது எதிர்மறை (Reactionary) இயக்கமாகவோ அல்லது கடந்த கால இலட்சியங்கள், நிறுவன அமைப்புகள், பழக்கவழக்கங்களை மீண்டும் புதுப்பித்து நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியாக இருக்கலாம்; **3) எதிர்ப்பு இயக்கம்** (Resistance Movement) உருப்பெறலாம். இவ்வியக்கத்தினர் சமுதாய, கலாச்சார மாற்றங்களை

எதிர்ப்பார்கள்; **4) கற்பனை உலக இயக்கம்** (Utopian Movement). இவர்கள் ஒரு கற்பனை சமுதாயத்தை உருவாக்கிக் கொண்டு அதை அடைவதற்காகப் பாடுபடுவர்; **5) உழவர் இயக்கம்** (Peasant Movement). உழுதுண்டு வாழும் உழவர்களின் நிலத்தை வஞ்சித்துப் பறித்துக் கொண்டு அவர்களின் உரிமைகளை உருவிவிட்டு கொத்தடிமைகளாகக் கொடுமைப்படுத்தும் போது அவர்கள் கிளர்ச்சி செய்வர்; **6) சமூக சமத்துவ இயக்கம்** (Social Equality Movement). நாடார் இயக்கம் இந்த வகையைச் சேர்ந்தது. **நாடார்களின் சமூக அநீதி எதிர்ப்புப் போராட்டத்தை சமூக சமத்துவ இயக்கமாக சித்தரித்துள்ளார் கே.ராஜய்யன்.**

## 13.3.6 போராட்டக் காரணிகள்

நாடார் சமூகத்தினர் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாகப் பல்வேறு சமுதாயக் கொடுமைகளுக்கும், அநீதிக்கும், அடக்குமுறை நடவடிக்கைகளுக்கும் பலியாயினர். இந்த அடிமைத் தளைகளிலிருந்து விடுபட நாடார்கள் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் ஒடுக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, **குமார வீரமார்த்தாண்ட நாடார்** தலைமையில் மதுரை நாயக்கர்களுக்கு எதிராக எழுந்த போராட்டம் இரும்புக்கரம் கொண்டு அடக்கப் பட்டது. அதன்பின் மதுரை நாடார்களின் நிலை மோசத்திலிருந்து மிகவும் மோசம் ஆயிற்று. தோற்கடிக்கப்பட்ட நாடார்கள் மதுரையை விட்டு வேறு இடங்களுக்குப் புலம் பெயர்ந்து செல்ல வேண்டியதாயிற்று. தமிழ் நாட்டை விட்டுத் திருவிதாங்கூர் சென்ற நாடார்கள் உழைப்பால் உயர்ந்தார்கள். அவர்களுடைய உயர்வைப் பொறுத்துக் கொள்ள முடியாத உயர்சாதி நம்பூத்திரிகளும், நாயர்களும், பிராமணர்களும், ஆட்சியாளரும் நாடார்களின் நிலங்களைப் பறித்துக் கொண்டு அநாதைகளாக கூலிக்காரர்களாக்கி விட்டனர். காயம்பட்டோரை அவமதிப்பதைப் போன்று நாடார்கள் கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அவற்றுள் ஒன்றுதான் நாடார் வகுப்புப் பெண்கள் மேலாடை அணியக் கூடாது என்று தடை உத்தரவு போட்டதாகும். இந்த ஆடைக் கட்டுப்பாட்டால் பெண்கள் மார்பகத்தைக்கூட மறைத்துக் கொள்ள முடியாத அவல நிலை ஏற்பட்டது.

## 13.3.7 வெற்றி ரகசியம்

வாழ்ந்து கெட்ட, எழுந்து வீழ்ந்த நாடார்களின் சமுதாயப் பின்தங்கலுக்கான காரணங்களையும், வெற்றி ரகசியத்தையும் அறிந்து கொள்வதற்காகப் பல ஆர்வலர்களும் ஆய்வாளர்களும் முயற்சி செய்தனர். அவர்களது விளக்கங்கள் வருமாறு: **1)** திருவிதாங்கூரில் இருபத்தி இரண்டு கால சமயப் பிரச்சார அனுபவங்களைப் பற்றி எழுதிய **ஜான் அப்பா** (John Abbas) பெருமைக்குரிய பாரம்பரியத்தைக் கொண்ட நாடார்கள் இழந்த நிலையை மீண்டும் நிலைநாட்ட முடியும் என்ற தன்னம்பிக்கையோடு தக்க தருணத்துக்காகப் பொறுமையோடு காத்திருந்தனர் எனக் குறிப்பிட்டுள்ளார். **2) சி.மாசிலமணி, சிவகுருநாதன், பாக்கியநாதன்** போன்றோர் சமுதாய ஏற்றத்தாழ்வுகள், புறக்கணிப்புகள், சமுதாய சமனற்ற நடவடிக்கைகள் பற்றி கவிதைகளையும், நூல்களையும் எழுதி நாடார்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்; **3) எ .வின்பிரட், சாமுவேல் சர்குணன்** ஆகியோர் நாடார்களின் வரலாற்றுப் பெருமை பற்றியும் அவர்களது வீழ்ச்சி குறித்தும் எழுதினர். இக்கருத்துக்கள் நாளடைவில்

நாடார்களிடையே பரவிற்று. அதன் விளைவாக அவர்கள் பாரம்பரியப் பெருமையில் திளைத்திருந்தனர். அப்பெருமைக்குரிய காலம் மீண்டும் வராதோ என்று ஏங்கிக் கிடந்தனர். 4) 19 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் பல மறுப்பியக்கப் பாதிரிமார்கள் தென் திருவிதாங்கூரில் தேவாலயம் நிறுவி மதப் பிரச்சாரம் செய்து, பல நாடார்களை மதமாற்றம் செய்தனர்; மதம் மாறியோரின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தனர்; அவர்களைப் பிற சாதியினருக்குச் சமமாக நடத்தினர். இதனால் மதம் மாறிய நாடார்கள் கல்வி கற்று, ஓரளவு வாழ்க்கை வசதிகளைப் பெற்று, சுயமரியாதையுடன் வாழ்ந்தனர். இவர்கள் பிற நாடார்களுக்கு ஆதரவாகப் போராடவும் தயாராகவும் இருந்தனர். 5) இந்நிலையில் வைகுந்தசாமியின் பிரச்சாரம் புது நம்பிக்கையையும், தன்னம்பிக்கை யையும், ஒன்று சேர்ந்து போராட வேண்டும் என்ற துணிவையும் தந்தது. இவர்கள் மேல்சாதிக்காரர்களின் சர்வாதிகார, அடக்குமுறை கொடுமைக் கட்டளைகளுக்குக் கீழ்ப்பணிய மறுக்கத் துணிந்தனர்!

### 13.3.8 நான்கு கட்ட போராட்டம்

திருவிதாங்கூரில் சமுதாய ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக நாடார்கள் 37 ஆண்டு காலம் போராடினார்கள். குறிப்பாக, பெண்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட மேலாடைக் கட்டுப்பாட்டை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்ததால் இது மேலாடைப் போராட்டம் என்று அழைக்கப்படுகிறது. இப்போராட்டத்தை நான்கு கட்டங்களாகப் பிரிக்கலாம்.

#### முதல் கட்டம்

#### கொத்தடிமை சேவை செய்ய மறுப்பு, 1820

திருவிதாங்கூரில் நிலச் சொந்தக்காரர்களாக இருந்த நாடார்களை நிலமற்ற விவசாயக் கூலிகளாக்கி, கொத்தடிமை வேலைகளைச் செய்ய சொன்ன மேல் சாதியினருக்குக் கீழ்ப்பணிய மறுத்தனர். வீட்டு வேலைகளையும், கோயில் சம்மந்தப்பட்ட நடவடிக்கை களையும் தொடர்ந்து செய்ய சம்மதிக்கவில்லை. இது அடக்கி வைக்கப்பட்டோரின் துவக்க கட்ட உரிமைக் குரலாகும். இதனால் ஆத்திரமடைந்த நாயர்கள் நாடார்களைப் பொது இடங்களில் தாக்கினர்.

#### இரண்டாம் கட்டம்

#### எதிர்ப்புக் கலகம், 1828

இரண்டாம் கட்ட போராட்டத்தின் போது வேதமாணிக்கம் போன்றோர் தலைமைப் பொறுப்பேற்று நாயர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். பல இடங்களில் கிளர்ச்சித் தீ பரவிற்று. இந்த வன்முறைத் தாக்குதலின் போது நாயர்கள் கிளர்ச்சிக்காரர்களை அடக்குவதற்காக அதிகாரிகளின் ஆதரவுடன் கொடுங்கோன்மைக் கட்டவிழ்த்து விட்டனர். இத்தாக்குதலில் வேதமாணிக்கம் உள்ளிட்ட பலர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமுற்றனர். அரசாங்கம் பாராமுகமாக இருந்தது! எஞ்சியிருந்த கிளர்ச்சிக்காரர்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டன. அவர்கள் மீது கொலைக் குற்றங்கள் சாட்டப்பட்டன.

### மூன்றாம் கட்டம், 1929

கிறித்துவ குருமார்கள் திருநெல்வேலியில் இருந்த அங்கிலப் பிரதிநிதியிடம் மனு கொடுத்தனர். அதே சமயம் அடக்குமுறையை மீறி போராட்டம் தீவிரமடைந்தது. இதன் விளைவாக 1929 இல் திருவிதாங்கூர் அரசாங்கம் ஒரு ஆணையைப் பிறப்பித்தது. அதன்படி கிறித்துவ நாடார் பெண்கள் ஒருவித மேலாடையை அணிய அனுமதிக்கப் பட்டனர்! அதைப் பார்த்து கிறித்துவர் அல்லாத நாடார் பெண்களும் அதைப் போன்ற மேலாடை அணியத் துவங்கினர்!! இப்போராட்டத்தில் வைகுந்தசாமி பிரதானப் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சிறு சீர்திருத்தத்தையும் பொறுத்துக் கொள்ள முடியாத மேல் சாதியினர் நாடார் பெண்கள் மேலாடை அணிவதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். இம்முயற்சி நாடார்களின் அடுத்த கட்டப் போராட்டத்துக்குக் கட்டாயப்படுத்தியது.

### நான்காம் கட்டம், 1858

1858 அக்டோபர் மாதம் அருமனூர், அமராவிலா போன்ற இடங்களில் வன்முறைக் கலகங்கள் வெடித்தன. இக்கலகங்கள் தெற்கு நோக்கிப் பரவிற்று. நாயர்கள் போலீ துணையுடன் நாடார்களின் வீடுகளைச் சூறையாடினர்; பலர் கொடுமைகளுக்கு உள்ளாயினர்; கலகக்காரர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு மேலும் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். பல நாடார்கள் திருநெல்வேலிக்குத் தப்பிச் சென்றனர். நிலைமை கட்டுமீறிச் சென்றது.

### 13.3.9 விளைவு

மேல் சாதியினர் போலீ , அதிகாரிகள், அரசாங்க ஆதரவுடன் நாடார்களைக் கொடுமைப்படுத்துவதைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு கிறித்துவப் பாதிரிகள் மீண்டும் சென்னை ஆளுநர் சார்ல டிரெவெல்யனி (Charles Trevelyan)டம் முறையிட்டனர். ஆளுநர் திருவிதாங்கூர் மகாராஜா மார்த்தாண்டவர்மாவின் செயல்பாடுகளைக் கடுமையாகக் கண்டித்துக் கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் நாடார்களுக்கு நீதி மறுக்கப்படுவது ஏற்கத்தக்கதல்ல என்று குறிப்பிட்டிருந்தார். எனவே, திருவிதாங்கூர் மகாராஜா 1859 ஜூலை 26 ஆம் தேதி நாடார் பெண்கள் மேலாடை அணிவதற்கு எதிரான கட்டுப்பாட்டை நீக்கி ஒரு பிரகடனத்தை வெளியிட்டார். அதிலிருந்து நாடார் பெண்கள் தங்கள் விருப்பப்படி மேலாடை அணிந்தனர். கொத்தடிமை முறை கைவிடப்பட்டது. நாடார்கள் உழைப்புக்கேற்ற ஊதியம் பெறும் நிலை உருவாயிற்று. மேலாடைப் போராட்டம் திருவிதாங்கூர் தமிழர்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்று குறிப்பிட்டுள்ளார் கே.ராஜய்யன்.

## 13.4 ஆலயப் பிரவேசப் போராட்டம் : திருவிதாங்கூர்

### 13.4.1 அனுமதி மறுப்பு

திருவிதாங்கூர் மேலாடைப் போராட்டத்தில் வெற்றிபெற்ற நாடார்கள் ஆலய நுழைவு இயக்கத்தைத் துவக்கினர். கோயில் கட்டுவதற்கும், கோயில் வேலைகளைச் செய்வதற்கும் அமர்த்தப்பட்ட நாடார்கள் கோயிலுக்குள் நுழையத் தடை செய்யப்பட்டனர்.

அனைவருக்கும் பொதுவான ஆண்டவனைத் தரிசிக்க அவர்களுக்கு அனுமதி மறுக்கப் பட்டது. கோயில் கட்டுமானப் பணிகளில் பங்கேற்காத நாயர்களும், பிராமணர்களும், வேளாளர்களும் கோயிலுக்குள் செல்ல, கோயிலைக் கட்டக் காரணமாக இருந்தவர்களைக் கோயிலுக்குள் அனுமதிக்க மறுத்தனர். அதுமட்டுமல்ல. கீழ்ச் சாதியினர் கோயிலுக்கு வெளியே குறிப்பிட்ட தூரத்தில் நிற்க வேண்டும் என்று கட்டாயப் படுத்தப்பட்டனர்; அவமதிக்கப்பட்டனர்.

### 13.4.2 வன்முறைப் போராட்டம்

நாகர்கோயிலுக்கு அருகே உள்ள **குமரக்கோயிலில்** தீமிதிப்பது வழக்கத்தில் இருந்தது. இப்பாரம்பரியப் பழக்கம் நாடார்களுக்கு மறுக்கப்பட்டது. நாடார்கள் இந்துக்கள் அல்லர் என்ற காரணத்தைக் கூறி அவர்களுக்குத் தீ மிதிக்க அனுமதிக்கவில்லை. **வெள்ளையன் நாடார்** என்பவர் உயர் சாதியினர் விதித்த இத்தடையைத் தகர்க்கத் தீர்மானித்தார். எனவே அவர் தீக்குண்டம் தயார் செய்து, பிரார்த்தனை பூஜைக்குப் பிறகு தீக்குழியில் இறங்கிக் கூத்தாடினார். இதைக் கண்ட ஏராளமான நாடார்கள் குதூகலித்துக் கொண்டாடினர். அதன்பின் **12,000** நாடார் பக்தர்கள் புடைசூழ **வெள்ளையன் நாடார்** தலைமையில் கோயிலுக்குள் நுழைந்தனர்! இதைப் போலீ உதவியுடன் நாயர்கள் தடுக்க முற்பட்ட போது வன்முறைக் கலவரம் வெடித்தது. இக்கலவரத்தில் **150** பக்தர்கள் உயிரிழந்தனர். நாடார் வரலாறு எழுதிய **கே.கொச்சு கிருஷ்ணன் நாடார்** இப்போராட்டம் சுரண்டப்பட்ட மக்கள் **சமுதாய அந்த து** பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்டத் துணிகர முயற்சியாகும் என்று குறிப்பிட்டுள்ளார். **ஆலயப் பிரவேச இயக்கம் நாடார்கள் சமுதாய சமத்துவத்துக்காக நிகழ்த்தியப் போராட்டம்** என்று கருதினார் **கே.ராஜய்யன்.** திருவிதாங்கூரில் நடத்தப்பட்ட இந்த ஆலயப் பிரவேச இயக்கத்தின் தாக்கம் தமிழ் நாட்டிலும் உணரப்பட்டது.

## 13.5 ஆலயப் பிரவேசப் போராட்டம் : தமிழ் நாடு

### 13.5.1 நாடார் நம்பிக்கை

திருவிதாங்கூருக்குப் புலம் பெயர்ந்து சென்ற நாடார்களுக்கும், தமிழ் நாட்டிலேயே தங்கியிருந்த நாடார்களுக்குமிடையே இடையறாத் தொடர்புகள் இருந்து கொண்டிருந்தன. தமிழ் நாட்டிலும் திருவிதாங்கூரிலும் நாடார்கள் கிறித்துவ நாடார்களாகவும், இந்து நாடார்களாகவும் பிரிந்திருந்தனர். திருவிதாங்கூர் நாடார்களின் ஆலயப் பிரவேசப் போராட்டத்தின் வெற்றி தமிழ் நாட்டு நாடார்களின் நம்பிக்கையையும், தைரியத்தையும், ஒன்றுபட்டுப் போராடும் துணிச்சலையும் கொடுத்தது. அதன் காரணமாக அவர்கள் பல இடங்களில் ஆலயப் பிரவேசப் போராட்டங்களை நடத்தினர்.

### 13.5.2 போராட்டங்கள்

**19** ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ் நாட்டில் நாடார்களின் ஆலய நுழைவு இயக்கம் சூடு பிடித்தது. **1870** ஆம் ஆண்டு நாடார்கள் **திருச்செந்தூர் கோயிலுக்குள்** நுழைய முயன்றனர். அவர்களது முயற்சிக்கு பிராமணர்களும், வேளாளர்களும் முட்டுக்கட்டை போட்டனர். **1874** இல் **மூக்க நாடார்** தலைமையில் நாடார்கள் **மதுரை**

**மீனாட்சி அம்மன் கோயிலுக்குள்** நுழைந்தனர். அதேபோன்று **1879** ஆம் ஆண்டு நாடார்கள் ஊர்வலமாகச் சென்று **கமுதி சுந்தரே வரர் கோயிலுக்குள்** நுழைந்து இறைவனுக்கு மாலை அணிவித்தனர். இம்முயற்சிகளெல்லாம் சட்டச் சிக்கல்களைத் தோற்றுவித்தன. வழக்குகள் பிரிவி கவுன்சில் சென்றன. இறுதியில், தீர்ப்பு நாடார்களுக்கு எதிராக அமைந்தது. நாடார்களுக்கு ஆலய நுழைவு உரிமை மறுக்கப்பட்டது. **1896** இல் நாடார்கள் **சிவகாசி சிவன் கோயிலுக்குள் நுழைய** முற்பட்ட போது அவர்களது நுழைவால் கோயில் களங்கப்பட்டு விடும் எனக் கூறி கோயில் கதவுகளை மூடிவிட்டனர். இப்போராட்டம் வன்முறைக் கலவரத்தில் முடிந்தது. ராணுவ உதவியுடன் இக்கலவரம் அடக்கப்பட்டது.

## 13.6 சாதனையாளர் : வைகுந்த சுவாமி, 1809–1851

### 13.6.1 வைகுந்தசாமி யார் ?

**19** ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நாடார்களின் உள்ளங்களில் தன்னம்பிக்கை விதையை விதைத்தவர் வைகுந்தசாமி ஆவார். வைகுந்தசாமி யார்? **1809** ஆம் ஆண்டு கன்னியாகுமரிக்கு அருகாமையில் உள்ள **சாமித்தோப்பு** என்ற கிராமத்தில் பிறந்த முடிசூடும் பெருமாளே பின்னர் வைகுந்தசாமி என்று அழைக்கப்பட்டார். இவரை **முத்துக்குட்டி சாமி** என்றும் அழைப்பதுண்டு. ஏழை நாடார் குடும்பத்தில் பிறந்த இவர் துன்பக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த தனது சமூக மக்களை சுதந்திரக் கரை சேர்க்கும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். நாடார்கள் தன்னம்பிக்கையோடு தலை நிற்பதற்கும், பின்னர் அவர்களது ஆலயப் பிரவேசப் போராட்டம் தீவிரமடைவதற்கும் வைகுந்தசாமிகள் பெரிதும் காரணமாக இருந்தார்.

### 13.6.2 அய்யா வழி

வைகுந்தரை இறைவனின் அவதாரமாகக் கருதிய மக்கள் அவரை **அய்யா** அல்லது **மக்களின் தந்தை** (Father of the People) எனக் கருதி மரியாதை செய்தனர். எனவே, வைகுந்தர் தாழ்த்தப்பட்டோரின் விடுதலைக்குக் காட்டிய மார்க்கம் **'அய்யா வழி'** என்று அழைக்கப்பட்டது. அய்யா வழி தனி வழி. அதன் தனித்துவத்துக்குக் காரணம் அய்யா வழியின் **ஒருமைப்பாட்டுத் தத்துவமாகும்**. இத்தத்துவம் **பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்** என்ற குறள் கோட்பாட்டின் (குறள் 972) அடிப்படையில் அமைந்ததாகும். அதாவது, மக்கள் அனைவரும் பிறப்பால் ஒன்றே; அவர்களுக்கு இடையேயான வேறுபாடுகளுக்குக் காரணம் அவர்கள் செய்யும் தொழில்கள் தானே அன்றி வேறு எதுவுமில்லை. அதனால் வைகுந்தரின் சமகாலப் பத்திரிகைகளும், அரசாங்க அறிக்கைகளும், ஆய்வாளர்களும் அவரது கோட்பாட்டை கிறித்துவர்களின் ஒரு **பொருண்மை வாதத்துடன்** (Monism) ஒப்பிட்டுப் பார்த்தனர். ஒரு பொருண்மைக் கோட்பாட்டாளர்கள் உடல்–மனம்–ஆன்மா ஆகிய மூன்றும் வெவ்வேறானவை என்ற விளக்கத்தை ஏற்காதவர்கள்; இவை மூன்றும் ஒரு உண்மையின் பிரதிபலிப்புகள் என்று கருதுபவர்கள். ஆனால் வைகுந்தர் மதமாற்றத்துக்கு எதிரானவர். கிறித்துவக் கோட்பாட்டை ஏற்காதவர்; அதற்கு எதிராகப் பிரச்சாரம் செய்தவர். இந்து சதுரங்க சமுதாய அமைப்புக்குள் இருந்து கொண்டு சீர்திருத்தம் செய்ய முற்பட்டவர். அதனால்

தான் அவரது சீடர்கள் மக்கள்தொகைக் கணக்கீட்டின் போது தங்களை இந்துக்கள் என்று பதிவு செய்தனர். இன்றைக்கும் வைகுந்த அய்யாவைப் பின்பற்றுவர்கள் இந்துக்கள் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

## 13.6.3 அய்யா வழி எது ?

### சொல்லும் செயலும்

அய்யா வைகுந்தத்தின் வாழ்வும் வாக்கும் தான் அய்யா வழியாகும். வைகுந்தரின் சொல்லும் செயலும் அவரது படைப்புகளான **அதிசயத் திரட்டு, அம்மானை, அருள் நூல்** ஆகியவற்றில் அடங்கி உள்ளது. அப்படிப் பார்க்கும் போது நன்மை நாட்டம், தீமையைத் தவிர்த்தல், தர்மம் செய்தல் ஆகிய மூன்றும் அய்யா வழியின் அடிப்படைக் கருத்துக்களாகும். இவற்றின் அடிப்படையில் அய்யா வைகுந்தர் இந்து மதத்துக்குப் புது விளக்கம் கொடுத்தார். அருளுடைமை, அறனுடைமை, அன்புடைமை, அறிவுடைமை ஆகியவை இந்து மதத்தின் சாரமாகும் என்று எடுத்துரைத்தார். அறிவு, அருள், அறன், அன்பு ஆகிய நான்கும் வள்ளுவர் வகுத்துக் கொடுத்த நெறிகளாகும். இந்த நான்கு நூல்களின் மீது சீர்திருத்தப்பட்ட தமிழ் சமுதாயம் கட்டப்பட வேண்டும் என்று விரும்பினார் அய்யா வைகுந்தர். எனவே, சதுர் வர்ண சமனற்ற சாதி முறையை நிராகரித்தார். சாதிக் கொடுமைகளுக்கு எதிராகப் போர்க்கொடி பிடித்தார். சாதிக் கொடுமைகளிலிருந்தும், ஏற்றத்தாழ்வுகளிலிருந்தும் தாழ்த்தப்பட்டோரை விடுவிக்க உறுதி பூண்டார்; போராடினார்.

### சமூக சமத்துவம்

அய்யா வைகுந்தரின் சமுதாய சிந்தனை **சமூக சமத்துவத்தை** (Social Equality) மையமாகக் கொண்டது. **சமுதாய வேறுபாடு** (Social Discrimination) தான் சாதியக் கொடுமைகளுக்கெல்லாம் மூல காரணம்; எனவே இச்சாதி வேறுபாட்டை முதலில் அடியோடு அகற்ற வேண்டும். அப்போது தான் சமுதாய சமத்துவத்தை உருவாக்க முடியும். **அச்சமே கீழ்களது ஆசாரம்.** எனவே அச்சம் தவிர்த்து அன்பு வழியைப் பின்பற்ற வேண்டும். அன்பும், மனித நேயமும், ஏற்றத்தாழ்வின்மையும் மக்களிடையே நெருக்கத்தையும், ஒற்றுமையையும், உள்ளன்பையும் உறுதிப்படுத்தும். எனவே, அய்யா வைகுந்தர் சமூக சீர்திருத்தப் பிரச்சாரங்களில் சமத்துவமின்மையின் மீது அமைக்கப்பட்ட சாதி முறையைக் கடுமையாகக் கண்டித்தார். பிராமணீயத்தைச் சாடினார். உயர்சாதி கீழ்சாதி என்ற நச்சுப் பாகுபாட்டை நிராகரித்தார். அய்யா வைகுந்தர் சாதி முறையைவிட சாதிப் பாகுபாட்டை வெறுத்து ஒதுக்கினார்.

### சாதி வேறுபாட்டுக்கு எதிர்ப்பு

அய்யா வைகுந்தர் சாதி வேறுபாட்டுக்கு எதிரான பிரச்சாரத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. அவருடைய சீர்திருத்தங்களுக்கு நிறுவன உருவமும் வடிவமும் கொடுத்தார். இவரது இயக்கத்துக்கென ஒரு கொடியை வடிவமைத்தார். தீபத்தைத் தாங்கி காவி நிற **'அன்புக் கொடி'**யின் கீழ், கீழ்ச்சாதியினரை ஒன்று திரட்டினார். அவர்களிடையே ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உருவாக்க **சமத்துவ சங்கத்தை** ஏற்படுத்தினார். அதன் மூலம் சமத்துவக் கோட்பாட்டைப் பிரச்சாரத்தின் மூலம் பரப்பினார்.

அனைத்து மக்களின் பயன்பாட்டுக்காகப் **பொதுக்கிணறு** ஒன்றை **சாமிதோப்பில்** உருவாக்கிக் கொடுத்தார். சாமிதோப்பு அய்யாவின் சமுதாய–சமய மையமாக உருவெடுத்தது. பிரார்த்தனைப் பிராந்தியமாக செயல்பட்ட அவ்விடத்தில் உருவ வழிபாட்டுக்கும், அர்ச்சகர் இடைத்தரகர்களுக்கும் இடமில்லை. அங்கு மாற்றுப் பாதை போடப்பட்டது. அங்கு பின்பற்றப்பட்ட சடங்குகளும் சம்பிரதாயங்களும் **சமூக சமத்துவத்தை** அடிப்படையாகக் கொண்டவை. அய்யா வழி தனி சமயமல்ல; அது சமதர்ம மார்க்கமாகும்.

## சாதனைகள்

பிற்படுத்தப்பட்ட, 'தீண்டத்தகாதோர்' என்று ஒதுக்கப்பட்டோரின் வீடுகளுக்குச் சென்று உணவு உட்கொண்டார் அய்யா வைகுந்தர். **சமபந்தி சாப்பாட்டுக்கு** ஏற்பாடு செய்தார். இறைச்சி உண்பதாலும், சுத்தமில்லாமல் இருப்பதாலும் தான் தீண்டாமை நீடிப்பதாகக் கூறி கீழ்த்தட்டு மக்களை **சைவ உணவு உண்டு, உடல் சுத்தம் காக்க வேண்டும்** என்று பிரச்சாரம் செய்தார். அவர் கருத்துக்களுக்கு செயல் வடிவம் கொடுப்பதற்கான பயிற்சி முகாம்களை நடத்தினார். அய்யா வழிமையங்களில் அனைத்து சாதி மக்களும் ஒன்றுகூடி உறவாடினர். இதன் மூலம் சாதி சமத்துவத்தை ஊக்குவித்தார். அய்யா வைகுந்தரின் சமுதாய சீர்திருத்த இயக்கம் தமிழ் நாட்டில் மட்டுமின்றி திருவிதாங்கூரிலும் எதிரொலித்தது. இவரது இயக்கம் தமிழ் நாட்டில் வள்ளலாரின் சன்மார்க்க சங்க இயக்கத்துக்கும், கேரளாவில் நாராயண குருவின் சமூக சீர்திருத்த இயக்கத்துக்கும், குறிப்பாக திருவிதாங்கூர் மேலாடைப் போராட்டத்துக்கும் வழிவகுத்தது.

## மதிப்பீடு

முடிசூடும் பெருமானாக வாழ்க்கையைத் துவக்கி, அய்யா வைகுந்தராகி, அவர் காட்டிய வழி நடந்தோர் பலர். அய்யா வழி சமுதாய சீர்திருத்த இயக்கம் தனித் தன்மையோடு சுயேட்சையாக செயல்பட்டது. இவ்வியக்கத்தின் கதவுகள் அனைத்து சாதியினருக்கும் திறந்து விடப்பட்டன. அய்யா வைகுந்தரின் சீடர்கள் இந்தியாவின் பல பகுதிகளிலும் காணப்பட்டனர். இவரது இயக்கம் ஒரு சாதியினருக்கு மட்டும் சொந்தமின்றி அனைத்து தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் பொதுவானதாகும். 19 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் அய்யா வழி இயக்கம் தெற்கு திருநெல்வேலியிலும், தெற்கு திருவிதாங்கூரிலும் வேர்விட்டு வளர்ந்தது. 1840களிலிருந்து அய்யாவின் இயக்கம் விரைந்து பரவியது. வைகுந்தரின் இலக்கியப் படைப்புகள் இவரது கருத்துக் கருவூலம். **தாமரையில் தீகொழுந்து சின்னம்** சமயப் பொதுமையைக் காட்டுவதாக உள்ளது. சமூக மறுமலர்ச்சி, சமயச் சீர்திருத்தம், அரசியல் போராட்டம் ஆகியவை அய்யா வழியின் மூன்று பரிமாணங்களாகும். இவர் ஒரு சாதியினருக்கு மட்டும் சொந்தமானவர் அல்லர். அய்யா வைகுந்தர் தமிழ் நாட்டு சமூக சமய சீர்திருத்தவாதிகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார் என்பதில் ஐயமில்லை.